**பாணந்துறை நகர சபை**

**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாணந்துறை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 514,816 நூலகப் புத்தகங்களின் பெறுமதி ஆண்டின் செலவினமாகவும் வருமான உதவியின் கீழ் வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 10,500 தொகையான வீட்டு வாடகை வைப்பு விடுவிப்பு மீளாய்வாண்டின் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கெப் வண்டியொன்றைக் கொள்வனவு செய்தலும் பாதுகாப்பு கெமரா முறைமையொன்றைப் (CCTV) பொருத்துதலும் இடம்பெறாதிருந்த போதிலும், அதற்காக ரூபா 8,600,000 தொகையான கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 300,275 தொகையான கடன்கொடுத்தோர் பெறுமதி கடன்கொடுத்தோராக ஒதுக்கப்படாமையின் காரணமாக ஆண்டின் கடன்கொடுத்தோர் பெறுமதியும் ஆண்டின் செலவினமும் ரூபா 300,275 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 211,320 பெறுமதியான தளபாட உபகரணங்களுக்காக மீளாய்வாண்டில் கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 250,000 பெறுமதியான கொங்கிறீட்மேசை மற்றும் வாங்குகள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன ரூபா 250,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் பொருள் ஏல விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 17,945 தொகை ஏனைய வருமானத்தின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக மூலதன உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியப் பணிப்பாளருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 531,241 தொகைக்காக கணக்குகளில் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 148,494,806 தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,534,367 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெற வேண்டிய கணக்குகள்**

காசோலை மதிப்பிழந்த அடிப்படையில் கிடைக்க வேண்டிய ரூபா 7,650 தொகையை 2012 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

மெய்மையாய்வுச் சபை அறிக்கை கிடைக்காமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 10,758,730 தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) | | |
| (i) 159(1)(எ) பந்தி | 150,000 | உள்ளூராட்சி நிறுவன விளையாட்டு விழாவிற்காக செலவினங்களைச் செய்வதற்காக உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (ii) 165 (இ)(1) ஆம் பந்தி | - | சபை அதிகாரப்பிரதேசத்தில் காணி ஏல விற்பனையின் போது ஏல விற்பனை செய்யப்பட்ட காணிகளின் பெறுமதியில் ஒரு சதவீத வருமானமொன்று சபையினால் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாது வருமானக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட அண்ணளவான வருமான மதிப்பீட்டில் ஒரு சதவீத தொகையொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2016 திசெம்பர் 23 ஆந் திகதிய 1999 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | 121,200 | நகரசபை எல்லையில் விளம்பர அறிவித்தல்களைப் பொருத்துவதற்காகவும் காட்சிப்படுத்துவதற்காகவும் காண்பிக்கப்பட்ட பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், விளம்பர அறிவித்தல் / 44 பெயர்ப் பதாதைகளுக்காக உரிய கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | - | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட காலம் பூர்த்தியாகும் போது மீண்டும் அந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத 04 நிறுவனங்கள் காணப்பட்டன. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபையின் வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 48,067,145 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 60,395,961 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 44,052,000 | 45,430,038 | 37,151,958 | 11,779,927 | 45,451,000 | 43,993,974 | 31,189,526 | 13,041,322 |
| வாடகை | 1,506,000 | 1,560,013 | 1,542,113 | 17,900 | 3,568,000 | 3,563,380 | 3,439,903 | 123,477 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,675,000 | 415,810 | 1,837,154 | - | 2,473,000 | 364,367 | 2,315,933 | 8,000 |
| ஏனைய வருமானம் | 76,271,000 | 55,000,000 | 23,968,441 | - | 60,957,000 | 40,000,000 | 67,884,945 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 13,172,799 ஆக இருந்ததுடன் ஆண்டில் சிட்டையிடப்பட்ட தொகை ரூபா 102,405,861 ஆகும். ஆண்டின் போது பெறுவனவுகள், பதிவழித்தல்கள் மற்றும் சீராக்கங்கள் ரூபா 103,780,833 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை ரூபா 11,797,872 ஆகும்.

### 2.2.3 வீதவரியும் வரியும்

**ஆதனவரி**

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை மீதி ரூபா 23,350,372 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 15,399,211 தொகை அதாவது 66 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்காக ஆதனவரி சிட்டையிடல் ரூபா 42,413,882 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 30,705,731 தொகை அதாவது 72 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.4 வாடகை

**வியாபார நிலைய வாடகை**

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 593,287 தொகையான வியாபார நிலுவை வாடகையொன்று நிலுவையாகக் காணப்பட்டதுடன் 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 386,517 தொகை அதாவது 65 சதவீதம் அறவிட வேண்டியிருந்தது.

(ஆ) 05 வருடங்களை விஞ்சிய ரூபா 386,260 தொகையான நிலுவை வியாபார நிலைய வாடகை மீதியில் ரூபா 27,793 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 358,467 தொகையினை அறலிடுவதற்கோ அல்லது வியாபார நிலைய உரிமைகளுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2017 ஆம் ஆண்டின் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண மெய்மையாய்வின் அனுமதிப்பத்திரம் பெறக்கூடிய 23 வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்ததாக வருமானப் பரசோதகர் அறிக்கையிட்டிருந்த போதிலும், அதனை உறுதிப்படுத்தும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினர்களிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 96,105,750 ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதி**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் கீழ் 15 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உபவிதியொன்று விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 06 விடயங்களுக்காக மாத்திரம் உப விதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமை**

தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய 92 இலக்குகளில் 60 இற்காக மாத்திரம் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையால் 32 இலக்குகளை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாத 10 செயற்திட்டங்கள் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

நகர சபையின் 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக வெளித்தரப்பினருக்கு முறையே ரூபா 19,479,079, ரூபா 31,059,000 மற்றும் ரூபா 30,635,703 தொகைகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 5,316,973 தொகையான செலவினமொன்று செலவிடப்பட்டிருந்தது. கழிவுப்

பொருள் முகாமைத்துவத்திற்கான பங்களிப்பான பதவியணியினர் செலவினம் மற்றும் அதற்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கு ஏற்பட்ட செலவினங்களையும் உள்ளடக்கி வருடாந்தம் கணிசமான செலவினமொன்று கழிவுப்பொருள் அகற்றுவதற்காக செலவிடப்பட்ட போதிலும், சரியான கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டமொன்றின் மூலம் அந்த செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2010 ஆம் ஆண்டின் போது கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையிலிருந்தும் சபை நிதியத்திலிருந்தும் ரூபா 774,593 தொகை செலவில் உயிரியல் வாயு அலகொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஊடகத்தின் மூலம் பெறப்பட்ட தெளிவுபடுத்தல் தவிர ஏனைய வழிகாட்டல்கள் மற்றும் வேலைத்திட்டம் என்பன சபைக்குரியதாகக் காணப்படவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமல் நிதிக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் நகர மண்டபம் ஒதுக்கீடு செய்யும் கட்டணம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த தீர்மானத்தின் பிரகாரம் கட்டணம் அறவிடப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 5438 ஆம் இலக்க காணி கூறிடல்களுக்குரிய வீதிகளை விரிவுபடுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ஏல விற்பனையாளரால் ரூபா 216,000 தொகையொன்று சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் அதன் பணிகளை நிறைவேற்றாமல் குறித்த பணம் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(இ) நகர சபைக்குச் சொந்தமான நீச்சல் தடாகத்திற்காக 2015 ஆம் ஆண்டு முதல் அதற்காக அறிவைக் கொண்ட நபர ஒருவரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது இந்த தடாகம் நடாத்திச் செல்வதால் தேறிய நட்டம் ரூபா 2,950,239 ஆக இருந்தது. இந்த நீச்சல் தடாகத்தை பயன்படுத்துபவர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்பட்டிருந்த போதிலும், தடாகத்தை பயன்படுத்துகின்ற தனியார் பயிற்றுவிப்பாளர்களிடமிருந்து எந்தக் கட்டணமும் அறவிடப்படாமையினால் அவர்கள் சபைக்குச் சொந்தமான ஆதனங்களை பயன்படுத்துகின்றமையால் கணிசமான வருமானமொன்று உழைக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபைக்குச் சொந்தமான முச்சக்கர வண்டி தரிப்பிடம் தொடர்பாக மெய்மையாய்வு செய்து முச்சக்கர வண்டி தொடர்பான தகவல்கள் பெறப்படாமையினால் சபை அதிகாரப்பிரதேசத்தில் பதிவு செய்துள்ள 68 வாகனத் தரிப்பிடங்களில் 10 இற்கு மாத்திரம் 2017 ஆம் ஆண்டின் போது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

**(அ) ஊழியர் வெற்றிடம்**

(i) இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் இருக்க வேண்டிய செயலாளர் பதவியில் வேலை மேவுகை செய்வதற்கு முகாமைத்துவ உதவியாளர் விசேட தரத்தின் பெண் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார்

(ii) கணக்காளர் பதவி ஆண்டு முழுவதும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(iii) சபையின் நிரந்தரப் பதவியணியில் 100 சுகாதாரத் தொழிலாளர்கள் சேவையாற்றிய போதிலும், அதில் 49 பேர் தமது உள்ளபடியான பதவிக்குப் புறம்பாக வேறு சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 48 வேலைக் கள உத்தியோகத்தர்களில் 27 பேர் வேறு கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**(ஆ) ஊழியர் கடன்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்படாதுள்ள ஊழியர் கடன் மீதி ரூபா 1,086,533 ஆக இருந்ததுடன் அதில் 2010 இற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 521,639 தொகையான இனங்காணப்படாத ஊழியர் கடன் மீதி மற்றும் சேவையை விட்டுச் சென்ற 05 வருடங்களை விஞ்சிய ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 8,925 தொகையான கடன் மீதிகள் காணப்பட்டது.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

**பொதுச் சந்தை கடைத்தொகுதிக் கட்டிடம் விபத்து ஏற்படக்கூடிய நிலைக்கு உட்பட்டமை**

1993 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் 25,830 சதுர அடி பரப்பளவைக் கொண்ட இரண்டு மாடிகளுக்காக திட்டமிடப்பட்டு, ஒரு மாடி மாத்திரம் அமைக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட இந்த சந்தைத்தொகுதி உள்ளடங்கியுள்ள 250 கடைகளையும் வெளியேயுள்ள 70 கடைகளையும் உள்ளடக்கியிருந்தது. எனினும், 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதி தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இந்தக் கட்டிடத்தின் கொங்கிறீட் கட்டமைப்பு துருப்பிடித்தமை, பழுதுபார்த்தல்கள் வினைத்திறனாக இன்மை, கட்டிடத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையொன்று ஏற்படக் கூடியமையால் உடைத்து அகற்றப்பட வேண்டுமென வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இதுவரையும் (2018 யூன் 30) அந்த சந்தைக் கடைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. மேலும், 2017 யூலை 04 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற கணக்குகள் செயற்குழுக் கூட்டத்தின் போதும், இந்த விடயம் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அனுப்புமாறு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், இதுவரை இந்தக் கட்டளையை அமுல்படுத்துவதற்கு நகரசபைக்கு இயலாதிருந்தது.

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 வழங்கல்

(அ) 20 கதிரைகளைக் கொள்வனவு செய்வதற்காக பதிவு செய்துள்ள வழங்குனர்களிடமிருந்து கூறு விலைகள் கோரி ஒரு கதிரைக்கு ரூபா 3,338 தொகையான ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த அல்பா இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திலிருந்து அந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்படாமல் பதிவு செய்யாத தம்றோ நிறுவனத்திலிருந்து ஒரு கதிரை ரூபா 4,027 வீதம் 20 கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 80,550 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பதிவு செய்துள்ள வழங்குனர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரும் போது தேவையான பொருட்களின் மாதிரி சரியான பிரகாரம் காண்பிக்கப்படாமையினால் கூறு விலை சமர்ப்பித்த வழங்குனர்களிடமிருந்து ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனங்களின் மாதிரிகள் கிடைக்கப்பெறாமையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டு அதிக விலை சமர்ப்பித்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 03 சதவீதம் முதல் 5,224 சதவீதம் வரையும், செலவினங்களில் 02 சதவீதம் முதல் 182 சதவீதம் வரையிலான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) கணக்குகளில் கைவிடப்பட்டமை மற்றும் குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டமை |
| | (ii) பேரேட்டுக் கணக்குகளில் குறைபாடுகள் காணப்பட்டமை |
| (ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் | (i) கூட்டுப்பசளை பணிகளுக்காக அனுப்பப்படாமை |
| | (ii) மீள்சுழற்சி நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படாமை |
| | (iii) கழிவுப்பொருட்களை அகற்றும் செலவினம் கட்டுப்படுத்தப்படாமை |
| (இ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | (ii) வரி மதிப்பீடு உரிய காலத்தில் இடம்பெறாமை |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) உள்ளபடியான வருமானத்திற்கும் பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்படாமை. |
| | (ii) பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| (உ) நிலையான சொத்துக்கள் | பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை |